IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.143/2023

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | JEGADEESWARI |
| HUSBAND NAME | : | SHIVAKUMAR |
| VILLAGE | : | VALATHUR |
| OCCUPATION | : | HOUSE WIFE |
| AGE | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 21th day of August 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் வளத்தூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது கணவரின் நண்பர் ஆவார். கடந்த 20.06.2022 அன்று மதியம் 03.00 மணியளவில் நான் மருத்துவமனைக்கு செல்வதற்காக சென்ற ஆட்டோ ஓட்டுனர் வளத்தூர் நடு மசூதி தெருவில் உள்ள IOB வங்கியில் இருந்து நான்கு வீடு தள்ளி அவர் வீட்டிற்கு சென்று காக்கி சட்டையை எடுத்து வருதற்காக ஆட்டோவை வீட்டின் வெளியே நிறுத்திவிட்டு உள்ளே சென்றபோது எதிரில் இருசக்கர வாகனத்தில் சலீம் என்பவர் வந்தார். அவர் எனது கணவருக்கு உடல் நிலை சரியில்லாததால் எங்களுடைய வியாபாரம் பார்த்து வந்தார். மேற்படி வியாபாரத்தின் மூலமாக வந்த பணத்தை அவர் கொடுக்காததால் நான் ஆட்டோவில் இருந்து இறங்கி சென்று அவரிடம் கேட்டபோது சலீம் என்னை வாடி போடி என்றும், அசிங்கமான வார்த்தைகளால் திட்டியும் என்னடி அடிக்கடி வந்து காசு கேட்கிறாய் என்று திட்டினார். சலீம் என்னை கண்ணத்தின் மீது அடித்தார். பின்னர் தலை முடியை பிடித்து இழுத்த போது பக்கத்தில் இருந்தவர்கள் வந்து விலக்கிவிட்டனர். பின்னர் காவல் நிலையத்திற்கு சென்று மாலை 04.30 மணியளவில் புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது ஆகும். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். எதிரிக்கும் எனக்கும் பணம் கொடுத்தல் வாங்கல் சம்பந்தமாகதான் பிரச்சனை இருந்ததா என்றால் சரிதான். மேல்பட்டி காவல் உதவி ஆய்வாளர் குமரன் என்பவரிடம் எதிரி எனக்கு கொடுக்கவேண்டிய பணத்தை திரும்ப பெற்று தரவேண்டி புகார் அளித்ததால் தான் உதவி ஆய்வாளர் எதிரியை அழைத்து பணத்தை திரும்ப கொடுக்கும்படி சொன்னார் என்றால் சரிதான். மேற்படி உதவி ஆய்வாளர் குமரன் சொன்னபடி பணம் கொடுத்ததால் தான் எதிரியின் மீது

இரண்டாவதாக இந்த புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னை அடித்ததால் தான் புகார் அளித்தேன். எதிரி பணம் திரும்ப கொடுப்பதாக ஒப்புகொண்ட பின்னர் எனது கண்ணில் படாமல் தலை மறைவாக இருந்தார் என்றால் சரியல்ல. நான் எதிரியின் வீட்டிற்கு சென்று பணத்தை திரும்ப கொடுக்கும்படி கேட்டேனா என்றால் கேட்கவில்லை. நான் கொடுத்த புகாரில் இன்று மதியம் சலீமை நேரில் சந்தித்தேன் என்று சொல்லியு்ளளேன் என்றாலும், சலீம் என்பவரை நேரில் சென்று பார்த்தேன் என்றாலும் சரியல்ல. எதிரி எதிரில் வரும்போது பார்த்தேன். புகாரில் சம்பவம் நடந்த நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

எனது கணவர் 2022ல் ஜனவரி மாதம் இறந்துவிட்டார். எனது கணவர் இறந்தபின்னர் இன்று வரையில் கடையை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். எனது கணவர் இறப்பதற்கு முன்பே எதிரி எங்கள் கடையில் மாதத்திற்கு ரூ.8000ற்கு வேலை செய்தார் என்றால் சரிதான். எனது கணவர் உடல் நலம் சரியில்லாமல் மருத்துவமனையில் இருந்து டிஸ்ஜார்ஜ் செய்த தேதி 08.07.2021 ஆகும். எனது கணவர் ஜீலை 2021ல் மருத்துவமனையில் இருந்து டிஸ்ஜார்ஜ் ஆன பின்னர் எதிரி கடைக்கு வருவதை நிறுத்தி கொண்டார் என்றால் நான் நிறுத்தி கொள்ளும்படி சொன்னேன். ஆனால் எதிரி கடைக்கு வந்து கொண்டிருந்தார். எதிரி ஜீலை 2021லேயே கடைக்கு வருவதை நிறுத்தி கொண்டார். என்னுஜடய கடைக்கு பின் பகுதியிலேயே வீடு உள்ளது என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள் என்றால் எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் CSR ரசீது எப்போது கொடுத்தார்கள் என்றால் புகார் அளித்து 3 நாட்கள் கழித்து கொடுத்தார்கள். சம்பவம் நடந்த இடத்தில் யார்யார் இருந்தார்கள் என்றால் அபாஸ், ஷாகீர், சாஹீர் ஆகியோர் இருந்தனர். போலிசார் விசாரணை செய்தபோது மேற்படி நபர்களின் பெயர் சொன்னேனா என்றால் அப்பாஸ் மற்றும் சாஹீர் பெயர்கள் சொன்னேன். சின்னப்பா மகன் மோகன், குப்புசாமி மகன் சேகர் ஆகியோர் நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தபோது உடன் இருந்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்திற்கு போலிசாரை அழைத்து சென்று நான் அடையாளம் எதுவும் காட்டவில்லை என்றால் சரிதான். நான் சென்ற ஆட்டோவின் ஒட்டுனர் பெயர் அப்பாஸ். ஆட்டோ ஓட்டுனர் வீட்டிற்கும் எங்கள் வீட்டிற்கும் 100 மீட்டர் தூரம் தான் இருக்கும். எதிரி என்னை கண்ணத்தில் அடித்ததாக நான் அளித்த புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

சம்பவத்தை விலக்கிவிட்ட நபர்களின் பெயர் தெரியாது. மேற்படி 3 நபர்களின் பெயர் மட்டும் தான் தெரியும். ஆட்டோ ஓட்டுனர் அப்பாஸ் என்பரின் வீட்டின் எதிரில் பிரச்சனை நடந்ததாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் என்னிடம் வாக்குமூலம் எதுவும் டைப் செய்து பதிவு செய்யவில்லை என்றால் வாக்குமூலம் பதிவு செய்தேன். ஆனால் டைப் செய்யவில்லை. போலிசாரிடம் அளித்த வாக்குமூலத்தில் நான் மேற்படி 3 நபர்களின் பெயரையும் அப்பாஸ் வீட்டின் எதிரில் சம்பவம் நடந்தது என்பதையும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல் எதிரி என்னிடம் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றாலும், எதிரி எங்களுடைய கடையில் இருந்து வேறு கடைக்கு சென்றுவிட்டதால் எதிரியை பழிவாங்கும் எண்ணத்தில் புகார் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் மீது பொய் புகார் அளித்துள்ளேன் என்றாலும், எதிரியை இந்த வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டும் என்றாலும் சரியல்ல.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.143/2023

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | ARUNKUMAR |
| FATHER'S NAME | : | SHIVAKUMAR |
| VILLAGE | : | VALATHUR |
| OCCUPATION | : | PRIVATE |
| AGE | : | 24 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 21th day of August 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் வளத்தூர் கிராமத்தில் குடியிருந்து தனியாரில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா ஆவார். கடந்த 2022ம் வருடம் ஒரு நாள் நான் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள எனது கல்லூரிக்கு சென்றுவிட்டு வகுப்பு முடித்துவிட்டு சுமார் மாலை 03.30 மணியளவில் வெளியே வந்தபோது எனது அம்மா எனக்கு போன் செய்து சலீம் என்பவரிடம் எங்களுக்கு கொடுக்கவேண்டிய பணத்தை திரும்ப கேட்டபோது சலீம் நீ என்னடி பணத்த திரும்ப கேட்கிறாய் என்று திட்டி அடித்ததாக சொன்னார். நான் ஸ்ரீபெரும்புதூரில் இருந்து கிளம்பி 07.00 மணியளவில் வளத்தூர் வந்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தில் இருந்து எத்தனை நாள் கழித்து விசாரணை செய்தார்கள் என்றால் 2 நாட்கள் கழித்து விசாரணை செய்தார்கள். போலிசார் விசாரணை செய்து படம் வரைந்ததாக சொல்கிறேன் என்றால் சரிதான். சம்வம் நடந்த இடத்தில் எந்த சாட்சிகளிடமும் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் யாரையும் வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை. அ.சா.1 எனது அம்மா என்றால் சரிதான். வழக்கு சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.143/2023

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | ARUN |
| FATHER'S NAME | : | GOVINDHSAMI |
| VILLAGE | : | VALATHUR |
| OCCUPATION | : | DRIVER |
| AGE | : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 21th day of August 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் வளத்தூர் கிராமத்தில் குடியிருந்து ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது நண்பரின் அம்மா ஆவார். அ.சா.2 எனது நண்பர் ஆவார். கடந்த 20.06.2022 அன்று மதியம் 01.00 மணிக்கு மேல் எனது நண்பர் அருண்குமார் நான் வீட்டில் இருந்தபோது எனக்கு போன் செய்து அவரின் அம்மாவிற்கும் கடையில் வேலை செய்த நபருக்கும் பிரச்சனை ஏற்பட்டதாக சொல்லி நேரில் சென்று பார்க்க சொன்னார். நான் அரை மணிநேரததில் வளத்தூர் பேங்க் தெருவில் சென்று பார்த்தபோது அருண்குமாரின் அம்மா காவல் நிலையம் சென்று புகார் அளிக்கபோவதாக சொல்லிவிட்டு சென்றுவிட்டார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் அருண்குமார் சொன்னதன்பேரில் அ.சா.1 ஜெகதீஸ்வரி அவர்களை பார்த்துவிட்டு திரும்ப வந்துவிட்டேனா என்றால் அ.சா.1 ஜெகதிஸ்வரி உடன் காவல் நிலையம் சென்றேன். அ.சா.1ஜெகதீஸ்வரி காவல் நிடிலையம் சென்ற உடன் அவரை பார்த்துகொள்வதாக சொன்னதால் நான் கிளம்பி விட்டேன் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்குள் நான் செல்லவில்லை என்றாலும், அ.சா.1 சொன்ன உடன் கிளம்பி விட்டேன் என்றாலும் சரிதான். வழக்கு சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.143/2023

DEPOSITION OF WITNESS P.W.4

| | | |
|---|---|---|
| NAME | : | NAGARATHINAM |
| FATHER'S NAME | : | MURUGAN |
| VILLAGE | : | SEMBEDU |
| OCCUPATION | : | STUDIO |
| AGE | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 21th day of August 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் செம்பேடு பகுதியில் குடியிருந்து ஸ்டூடியோ வைத்துள்ளேன் அ.சா.1ஐ எனக்கு தெரியும். நான் அவரது விட்டின் எதிரில் ஸ்டூடியோ வைத்துள்ளேன். இவ்வழக்கு சம்பந்தாமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் போலிஸ் விசாரணையில் ஜெகதீஷ்வரி என்பவரையும் அவரது கணவர் சிவகுமார் என்பவதையும் தெரியும் என்றும், அவரது மளிகை கடை வைத்து தொழில் செய்து வருவதாகவும், ஒன்றரை வருடத்திற்கு முன்பு சிவகுமார் இறந்துவிட்டதால் அவரது மனைவியார் கடையை சரிவர நடத்த முடியாததால் சலீம் என்பவர் கடையை கவனித்து கொள்வதாகவும், சலீம் என்பவர் வரவு, செலவு கணக்குகளை சரிவர கொடுக்காததால் ஜெகதீஷ்வரி கணக்கு காட்டுமாறும் கேட்டுக்கொண்டதில் தரவேண்டிய 195000 ரூபாய் பணத்தை திரும்ப கேட்டபோது சலீம் அவரை தகாத வார்த்தையால் திட்டியதாகவும், தலை முடியை பிடித்து நடு ரோட்டில் அடித்ததாக கேள்விபட்டதாகவும் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதவராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை**

Sd/–R.Saranya.,

Judicial Magistrate,
Gudiyatham.